கிறிஸ்துவ நம்பிக்கை என்பது விண்ணக எருசலமில் ஒரு நாள் எனது ஆண்டவரை நேருக்கு நேர் பார்ப்பேன் என்பது. என் மீது அவர் கொண்டிருக்கும் பேரன்பை நித்தியத்திற்கும் அங்கு வியந்திருப்பேனே? கண்ணீர் கணவாயில் எனது வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தாலும், எனது வாழ்வை மாற்றியமைத்து, இறையரசுக்கு அழைத்துச் செல்லும் ஆவலை என்னில் எழுச்சியூறச் செய்வதே, இந்த நம்பிக்கை. மனிதக்குலத்தில் அல்லது வன்முறையும் வெறுப்பும் சூழ்ந்திருக்கும் இவ்வுலகில், இந்த நம்பிக்கை வார்த்தை மனுவுருவெடுத்து, ஆன்மீக வகையில் அன்பு மொழி பேச வேண்டுமென்பதல்ல. மாறாக, தன்னையே முழுமையாக வழங்கும் அன்புக் கடமையை ஆற்றுவது. இதனால் இவ்வன்பு, அதன் பிறப்பிடத்திற்குக் நம்மைக் கொண்டு சேர்க்கும்.

கடவுள் எனக்குக் கொடையாக அளித்த எனது ஆன்மாவின் மீட்பே, எனது நம்பிக்கையின் எதிர்பார்ப்பு. கடவுள் முதலில் என்னை அன்பு செய்வதால்தான், நான் அவரை அன்பு செய்கிறேன். இயேசு கிறிஸ்துவில் எனக்காக தம்மையே அளித்த அவரிடம் எனது வாழ்கையை ஒப்படைக்க நான் என்றும் ஆவலுடன் காத்திருக்கிறேன். நான் என்னையே அன்பு செய்கிறேன் என்பது, கடவுளின் அன்புக்கு என்னையே நான் அர்ப்பணிக்கிறேன் என்றும் எனது சொந்த மீட்பை ஆசிக்கிறனே் என்றும் அர்த்தமாகும். செபத்திலும் அருட்சானத்திலும் ஆறுதல் தேடும் வேளையில் எனது அச்சத்தையும் நடுக்கத்தையும் போக்குகிறனே் (பிலி. 2:12). எனது அயலானை நேசிக்கிறேன் என்பது அவர்களும் மீட்பு பெறுவதை விரும்புகிறனே் என்று அர்த்தம். அதற்காக சிலுவை வரை கிறிஸ்து சென்ற பாதையில் நானும் செல்ல தயாராகயிருக்கிறேன்.

அனைத்து ஆன்மாக்களும் மீட்பு பெற வேண்டும். அதற்கு இயேசு கிறிஸ்துவே நமது ஒரே நம்பிக்கை. இவ்வுலகில் ஒரு மாய ‘இறையரசை’ உருவாக்க நாம் இங்கு இல்லை. இதனால் கிறிஸ்து மாட்சிமையில் மீண்டும் வரும்போது, பரலோகத்தில் இருக்கும் தந்தையிடம் நம்மோடு திரும்ப வேண்டிய தேவையில்லை என இயேசு கருதக்கூடாது. நாம் இங்கு இருப்பது, “காண்பவற்றையல்ல, நாங்கள் காணாதவற்றை நோக்கியே வாழ்கிறோம். காண்பவை நிலையற்றவை; காணாதவை என்றென்றும் நிலைத்திருப்பவை”(2கொரி. 4:18). ஏனெனில், , “நமக்கோ விண்ணகமே தாய்நாடு; அங்கிருந்து இயேசு கிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கிறோம்”(பிலி. 3:20).

இந்த கண்ணோட்டத்தில், பரம சந்தோஷத்திற்கான நமது ஆவலைப் பூர்த்திச் செய்யும் கடவுளின் கொடையான நம்பிக்கை ஒளிக்கு என்னோடு நீங்கள் அனைவரும் விழித்தெழ வேண்டுமென இன்றைய திருவருகை காலத்தின் இந்த முதல் ஞாயிறு நற்செய்தி வலியுறுத்துகிறது. நித்தியமான கடவுளின் மகிமை மீதான இந்த நம்பிக்கை, இவ்வுலகில் நமது வாழ்வின் பாதையைச் சீர்பார்க்கச் செய்ய வேண்டும். நிரந்திரமாக அனுபவிக்கவிருக்கும் நித்திய மகிழ்ச்சியின் எதிரொலியாக தற்போதைய மகிழ்ச்சியை நாம் காண வேண்டும். தற்போதைய நமது இவ்வுலக இன்னல்கள், கிறிஸ்துவின் பாடுகளோடு ஒப்பிடுகையில் அற்பமாக கருத வேண்டும். இந்த இன்னல்களினால் நமது நம்பிக்கை வலுவடைந்து, சிலுவையில் ஒன்றிணைக்கப்பட்டு நமது மீட்புக்கும் நமது அயலான் மீட்புக்கும் நாம் பணியாற்றுகிறோம். அவர் மீண்டும் வரும் போது நம்மில் வாழும் நம்பிக்கை, எழ வேண்டும். இதுவே திருவருகை காலத்தின் செய்தி. “இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததைக் கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்” (தி.ப. 1:11).

அற்ப காரியங்களிலும், சுகம் அல்லது வெற்றியிலும் நம்பிக்கை கொள்ளாமல், கிறிஸ்துவின் வாக்குறுதியில் நம்பிக்கை வையுங்கள்.

“இதோ, ஒரு மறை பொருளை உங்களுக்குச் சொல்கிறேன்; நாம் யாவரும் சாகமாட்டோம்; ஆனால் அனைவரும் மாற்றுரு பெறுவோம். ஒரு நொடிப்பொழுதில், கண் இமைக்கும் நேரத்தில், இறுதி எக்காளம் முழங்கும் போது இது நிகழும். எக்காளம் முழங்கும்போது இறந்தோர் அழிவற்றவர்களாய் உயிருடன் எழுப்பப்படுவர்; நாமும் மாற்றுரு பெறுவோம். ஏனெனில், அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும். சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்தாக வேண்டும். அழிவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாகாமையையும் அணிந்து கொள்ளும்போது மறைநூலில் எழுதியுள்ள வாக்கு நிறைவேறும்: “சாவு முற்றிலும் ஒழிந்தது; வெற்றி கிடைத்தது”” (1கொரி. 15:51–54) ✢

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWREC

3 டிசம்பர் 2017
திருவருகை காலம்
1ம் ஞாயிறு

# எழுச்சியூட்டும் நம்பிக்கை



ஆண்டவர் வரும் போது அவர் என்னை இந்நிலையில் காண வேண்டுமென நான் விரும்புகிறேன்? நிச்சயமாக, மீட்பு நாளை எதிர்பார்த்து விழிப்பு நிலையில்தான். ஆனால் ஆண்டவர் நாளை எதிர்நோக்கி தயாராக இருப்பதற்கு இன்று நான் என்ன செய்ய வேண்டும்? திருவருகை காலமே, தயார்ப்புகளில் ஒன்று. கிறிஸ்மஸ் திருவிழாவிற்கான ஏற்பாடுகளாக இந்த தயாரிப்புகள் இருக்கின்றன. வாழ்த்து கார்டு எழுதுவது, பரிசுகள் வாங்குவது, அலங்காரம் செய்வது...டிசம்பர் மாதம் மிகவும் பரபரப்பான மாதம்தான். திருவருகை கால மலர்வளையத்தில் முதல் கத்திருப்பு மெழுகுதிரி ஏத்துவதற்கு முன்னேரே, பேரங்காடிகளில் மேற்கொள்ளப்படும் அலங்காரங்களும் கிறிஸ்மஸ் பாடல்களும், இவ்விழா காலத்தின் உண்மை அர்த்தத்தை மறைத்து விடுகின்றன.

இக்காலம் மனமாற்றத்திற்கு, பாலைவனத்தில் ஒலித்தக் குரல் மனம் மாற அழைப்பு விடுக்கிறது, “ஆண்டவருக்கான வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள்“ (மாற்கு 1:3). ஆண்டவரை வரவேற்க உங்கள் உள்ளத்தை ஆயத்தமாக்குங்கள். சாத்தானையும் அவன் லீலைகளையும் விட்டுவிட்டு, பாவத்திலிருந்தும் சாவுவிலிருந்தும் விலகி, மீட்பின் ஆடையான வெண்ணிற ஆடையை அணிந்து கொண்ட உங்கள் ஞானஸ்நானத்தை நினைவுகூருங்கள். அந்த ஆடையை மீண்டும் எடுங்கள், முதன் முறையாக அணிந்த போது இருந்த வெண்ணிறம் இருப்பதை உறுதிச் செய்துக் கொள்ளும்காலமே, திருவருகை காலம். ஆண்டவரைச் சந்திக்கத் தடைகளாக இருப்பவற்றை அகற்றி விடுவதே, பாதையைச் செம்மையாக்குங்கள் என்பதன் பொருள். பயமிருந்தால், நமது பாவச் சுமைகளிலிருந்து விடுதலை பெற்று, நமக்கு பாவத்திலிருந்து விடுதலை அளித்தவரை அரவணைக்கத் தயாராகயிருக்கும் போதுதான், நம்பிக்கையில் அவரை நேருக்கு நேர் நீங்கள் காண்பீர்கள். இந்த காரணத்திற்காகவே, கிறிஸ்துவின் முள்முடியையும், கசையடியையும், ஏளனப்பேச்சுகளையும், ‘சிலுவையில் அறையும்’ என்ற மக்களின் கூக்குரலையும் நினைவுறுத்தும் ஊதா வண்ணத்துடன் புதிய திருவழிபாட்டு ஆண்டை தொடங்குகிறோம். சிலுவை சாவை ஏற்கும் அளவுக்கு கிறிஸ்து கீழ்படிந்தார் என்பதை நினைவுறுத்துகிறது. அவர் காட்டிய அந்த பேரன்பை ஏற்க மறுக்கும் நம்மையும் தலை வணங்க செய்கிறது.

திருச்சபை ஆண்டின் தொடக்கத்தில், வார்த்தை ஏன் மனுவுருவானது என்பதையும் அதனால் நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் மனமாற்றத்தை அடைய முடியும் என்பதையும் ஞாபகப்படுத்தப்படுகிறது. ஆண்டவரிடம் திரும்பிவந்து, அவரது இரக்கத்தையும் மீட்பையும் காண, மனந்திரும்புங்கள் என இன்றைய திருப்பாடல் குறிப்பிடுகிறது. அவரது மகனின் மரணத்தில் மனிதனின் பாவத்தை ஏற்றுக் கொண்ட தந்தையின் முன் நீதி அணிவகுத்துச் செல்லும், அவரது காலடியில் சமாதானம் வழிந்தோடும். “உன்னதங்களிலேயே கடவுளுக்கு மகிமை உண்டாகும், பூலகில் நன்மனத்தோர்க்கு அமைதி உண்டாகுக” என அவரது பிறந்த நாள் பாடலை வானுக்கும் பூமிக்கும் இடையில் வானத்தூதர்கள் பாடுவார்கள்.

கிறிஸ்துவில் வழங்கப்பட்ட சமாதானத்தில் நாம் வாழ்ந்தால், கடவுளின் மாட்சிமை நமது வாழ்வில் வெளிப்படும். மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையிலான இடைவெளியை கிறிஸ்துவின் சமாதானம் போக்குகிறது. வார்த்தை மனுவுருவானது, மரணம், சாவிலிருந்து உயிர்ப்பு, தந்தையின் வலப்பக்கத்திற்கு எழுந்தேறியது ஆகியவை நமது பேர்க்கால பணியை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறது. நமது பாவத்தைப் போக்கியுள்ளது.ஆகவே இந்த திருவருகை காலத்தில், அவரது வருகைக்கு மாட்சியுடன் காத்திருக்கிறோம். மாசுமறுவற்றவர்களாய், நல்லுறவு கொண்டவர்களாய் சமாதானத்தில் வாழ்ந்திருப்பவர்களாய் நம்மை அவர் காண்பாராக! (2பேதுரு 3:14).

“அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் தோன்றும் போது நாமும் அவரைப் போல் இருப்போம். ஏனெனில் அவர் இருப்பது போல் அவரைக் காண்போம். அவரை எதிர்நோக்கி இருக்கிற அனைவரும் அவர் தூயவராய் இருப்பதுபோல் தம்மையே தூயவராக்க வேண்டும்”. ✣

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWREC

10 டிசம்பர் 2017
திருவருகை காலம்
2ம் ஞாயிறு



# நம்பிக்கையில் தயாராக இருப்பது

கீழ்வானத்தில் கதிரவன் உதிக்குமுன் இளஞ்சிவப்பு ஒளியினை கண்டதும், கதிரவன் இன்னும் உதிக்கவில்லையானாலும், இரவு முடிந்து மற்றொரு நாள் தொடங்கப் போகிறது என மன நிறைவடைகிறோம். இளஞ்சிவப்பு ஒளி கருஞ்சிவப்பினோடு ஒளிர்வித்து, மீட்பின் தொடக்கமென திருவருகை காலம் வாக்களிப்பதை உணர்த்துகிறது. ஆக திருப்பலிக்காக நாம் ஒன்றுகூடியிருக்கும் வேளையில் குரு இளஞ்சிவப்பு உடையுடன் வர, திருச்சபை ‘இறைவனில் அகமகிழுங்கள், ஆண்டவர் அண்மையில் உள்ளார், நீங்கள் மீண்டும் அகமகிழுங்கள்’ என்று பிரகடனப்படுத்துகிறது.

நமது திருவருகைக்கால தியாகங்களுக்கான காரணங்களும் நமக்கு மீண்டும் நினைபுறுத்தப்படுகின்றன. கிழக்கினில் அனுதினமும் கதிரவன் தோன்றுவது போல நமது துன்பங்கள் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்னும் வாக்குறுதியால் நாம் ஆறுதலடைகிறோம். ஆனால் ஆண்டவரிடம் நம்மை இட்டுச்செல்லும் புனித பாதையிலிருந்து நம்மை பிரிக்கும் பாவத்திற்கு மனம் வருந்த நம்மையே உள்நோக்கி, மனசாட்சியை ஆராய வேண்டும். இருந்தாலும் ஆண்டவரின் வருகையுடன் வரும் மகிழ்ச்சியின் நிறையொளி நமது நிழலினை விரட்டி, மனிதத் துன்பமெனும் இருளினை முற்றாக போக்கிவிடும் விடியலை நாம் வெளியிலும் காண வேண்டும்.

இந்த இளஞ்சிவப்பு ஒளியில் கிறிஸ்துவ மகிழ்ச்சியின் இயல்பை நாம் கவனிப்போம். நீங்கள் ஆகக்கடைசியாக, உண்மையான மகிழ்ச்சியில் இருந்தது எப்போது? அம்மகிழச்சியின் காரணம் என்ன? எவ்வளவு நேரம் அது நீடித்தது? உலகிலுள்ள அனைத்தும் மங்கி மறைந்துவிடும். இதுவே உலகின் நிலை, உலகை சார்ந்த அனைத்து மகிழச்சியும் இவ்வவாறே மங்கி மறைந்துவிடும். இது இயற்கையின் நியதி. புது காரின் வாசம் சொல்லாமல் ஒருசில மாதங்களில் மயமாகிவிடும். அந்த காரை ஓட்டும் மகிழ்ச்சியும் அன்றாட போக்குவரத்து நெரிசலால் ஏற்படும் வெறுப்பினால் விரைவில் ஓய்ந்துவிடும். விடுமுறையில் சென்று வந்த மகிழ்ச்சியும் அவற்றின் நினைவுகளும் தரும் தற்காலிக மகிழ்ச்சியும் வேலையின் பளு காரணமாக காணாமற்போய் விடும். . நமது இன்பமான நினைவுகளை ஞாபகப்படுத்தும் முகநூல் படங்களும் கடந்துவிடும். நமது எல்லா மகிழ்ச்சிகளும் வாக்களிக்கப்பட்ட முடிவில்லா விண்ணக பேரின்பத்தில் ஊன்றியிருந்தால்தான், கிறிஸ்து கொண்டுவரும் நம்பிக்கையில் நாம் மகிழ்ச்சி கொள்ள முடியும்.

அனைத்து நன்மைகளையும் நமக்களிக்கும் இறைவனுக்கு நமது மகிழ்ச்சியை அர்ப்பணமாக்குவதே, இவ்வுலகை கடந்து விண்ணகத்திற்கு அருகில் அன்றாடும் நம்மை கொண்டு செல்லும் பேரின்பத்தின் தொடக்கமாக அமையும். இதனால்தான், ‘எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள்’ என்று புனித பவுல் கூறுகிறார். ஆம். நாம் மகிழ்வதற்கு காரணம் இல்லாவிட்டாலும், நமது விருப்பப்படி எதுவும் நடக்கவில்லை யெனினும் நாம் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும். காரணம் “கிறிஸ்து இயேசுவில் நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்” புனித பவுல் வலியுறுத்துகிறார். நமது கவலைகள், துன்பங்கள் மற்றும் உலகில் உள்ள அனைத்தையும் அதனதன் இடத்தில் முறையாக வைக்கும் இயேசு கிறிஸ்துவே முடிவில்லா மகிழ்ச்சி. இவ்வுலக மகிழ்ச்சியோ கடந்து போகும். இறையரசில் இயேசு கிறிஸ்துவோடு இருப்பதே நித்திய மகிழ்ச்சி.

இன்று நமக்கு அளிக்கப்படும் இளஞ்சிவப்பு கண்ணாடி மகிழ்ச்சியின் நம்பிக்கையாகும். நாம் இவ்வுலகில் கவலையையும் மகிழ்ச்சியையும் சேர்ந்தே அனுபவிக்க வேண்டுமென்பதனை நிராகரிக்கவில்லை. மாறாக நமக்கு கிறிஸ்துவின் வருகை விடியலை வழங்குகிறது. மேலும் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு திருமுழுக்கு யோவானுடன் நாமும் சேர்ந்து, சாட்சிகளாக நிற்க செய்கிறது. ✛

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWBEC

17 டிசம்பர் 2017

திருவருகை காலம்
3ம் ஞாயிறு



# நம்பிக்கையில் மகிழ்ச்சியாய் இருப்பது

BUL 51/2017

இம்மானுவேல், கடவுள் நம்மோடு – இயேசு கிறிஸ்து வார்த்தையிலிருந்து உடலெடுத்ததை, வானத்தையும் பூமியையும் உவமையாக்கி, மனுவுருவானதன் மறைபொருளை திருவருகை கால நான்காம் ஞாயிறு நுழைவு வாழ்த்தொலி அழகாக எடுத்துரைக்கிறது. மனிதப் பாவம் மீதான ஆத்திரத்தாலோ, பழிவாங்கும் படலத்தாலோ வானம் திறக்கவில்லை. மாறாக அன்பின் காரணமாக கடவுளே மனித உடலெடுத்தார். பதில் மொழியாக பூமியும் கரம் உயர்த்தி அவரை ஏந்தி கொண்டு, உலக மீட்பரை வரவேற்பது, அவரை ஏற்றுக்கொள்வது அனைத்தும், நமது மனதை திறந்து வைத்திருக்கிறோமா என்பதை பொறுத்துள்ளது.

நாளை, கிறிஸ்து பெத்லேகமில் பிறக்கிறார். கோலாகல சூழ்நிலையில் அல்லது அச்சமும் நடுக்கமும் கலந்த சூழ்நிலையில் இது நிகழவில்லை. இது நிகழ்வதற்கு முன்பு எந்தவொரு எச்சரிக்கையோ, அறிவிப்போ, உலகமே மாறிவிடும் என்ற எதிர்பார்ப்போ இல்லை. சாலையில் மக்கள் கூட்டம் கூடவில்லை, கோலாகலம் தொடங்குவதைக் காண மக்களிடையே ஆர்வமில்லை. இரவு நேரத்தில் பனி துளி போல கடவுள் நம்மிடையே வந்தார். வானத்தையே அண்ணாந்து பார்த்து நிற்பதற்கு காலம், நேரம், மாதம், தேதி போன்றவை முன்கூட்டியே நமக்குச் சொல்லப்பட்டதா? ஆனால் கடவுள் இவ்வாறு வரவில்லை.

வானத்தின் மேகங்களிலிருந்து அவர் வரவில்லை, அவரது படைப்பிலிருந்து வந்தார். நாம் உணராவிட்டாலும் நம்மை முழுமையாக மாற்றுவதற்கு, மண்ணிலிருந்து படைக்கப்பட்ட நாம், வானத்தின் பனிதுளியால் மூடப்படிருக்கிறோம். நித்திய உருவமாற்றத்திற்கு இதுவே அத்தியாவசியம். இரவில் நமது கண்கள் பார்க்க முடியாது என்பதல்ல, நம்மோடு வந்துவிட்ட இனுமாலை, வானத்தின் வெளிச்சத்தில் நம்மால் காண முடியும். அமைதியாக, ஆர்ப்பாட்டம் இல்லாமல் இறை மென்மையில் மனுவுருவானது. மாசு அடைந்திருக்கும் இயற்கையைப் பாதிக்காமல், மீட்பை விதைத்து, பாடுகளை மட்டும் அவர் தாமே சுமந்து கொண்டார்.

காலம் நிறைவேறிய போது வந்திறங்கிய அவருடனான நமது ஒன்றிப்பு அன்பில் உருவாக்கப்பட்டுள்ளது. அவரது அன்பை, தொடக்கத்தில் நிராகரித்த நம்மை அவரோடு இணைப்பதற்கு, தந்தை தமது மகனை அனுப்பி மீட்பளித்தார்.

அழிந்துபோகும் நமது உடலில் படர்ந்திருக்கும் தூசியின் மீது வானத்தின் பனிதுளி விழுந்து நம்மை உயர்த்தியது. அவரது வருகையின் போது, மாட்சிமிக்க பேரொளியால் அந்த பனிதுளி மனிதன் மீது விழுந்தது; உதய சூரியன் கிறிஸ்துவின் ஒளியால், படைத்தவரிடமே மனிதன் ஈர்த்துக் கொள்ளப்படுவான். அன்பு மனுவுருவானது போல, கடவுள் மனிதனைப் படைத்தது போல, கிறிஸ்துமஸ் நன்னாளில் மீட்பரும் அரசருமான அவரை நாம் வரவேற்போம். ✢

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWREC

24 டிசம்பர் 2017
திருவருகை காலம்
4ம் ஞாயிறு



# வானமே, பனி மழை பொழியட்டும்

கிறிஸ்துவ நம்பிக்கையில் அடங்கியுள்ள உண்மைகளைப் புரிந்து கொள்வதற்கு புனித பவுல் உதவியுள்ளார். நமக்கு நம்பிக்கை அளிக்கவில்லை, ஏதோ வேறென்று என நாம் கூறியிருக்கிறோம். இதனை நாம் நன்கு அறிந்து கொள்ள புனித பவுல் நமக்கு உதவுகிறார். நமது வாழ்வின் நமது விசுவாச அனுபவத்தின் இரண்டு முக்கிய குணங்களைக் கொண்டு இன்று நமக்கு அவர் விளக்குகிறார். "ஊக்கம்", "ஆறுதல்" (வசனம் 4–5) ஆகிய இரண்டு வார்த்தைகள் வழியாக அதனை புனித பவுல் விளக்குகிறார். உரோமையருக்கு எழுதிய கடிதத்தில் இரண்டு முறை இந்த வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றின் அர்த்தம் என்ன? நம்பிக்கைக்கு அவை தரும் ஆதாரம் என்ன? விடாமுயற்சி, ஆறுதல் ஆகிய இரண்டு குணங்கள்.

விடாமுயற்சி என்பது உண்மையில் பொறுமையைக் குறிக்கிறது. கடமையை ஏற்றுக் கொண்ட ஒருவர் எதிர்நோக்கும் இடர்களுக்கு இடையில் தொடர்ந்து விசுவாசமாக இருப்பதற்கான "ஆதரவு" வேண்டும். சுமையை தாங்க முடியாத அளவிற்கு இருந்தால், பாதகமான முடிவுக்கு வந்து, அனைத்தையும் கைவிடுகிறோம். ஆறுதல்

என்பது நமக்கு கிடைத்த அருள், ஏமாற்றம், வேதனை நிறைந்த ஒவ்வொரு சூழ்நிலையிலும் கடவுளின் பரிவிரக்கச் செயலைக் காண முடியும். திருநூல், குறிப்பாக விவிலியம், விடாமுயற்சியையும் ஆறுதலையும் வழங்குகின்றது. முதலில், இயேசுவை ஆழ்ந்து நோக்கி, அவரோடு நெருங்கி, அவரைப் போல் இருக்க, இறைவார்த்தை நம்மை இட்டுச் செல்கிறது. இரண்டாவது, கடவுள் உண்மையிலேயே "விடாமுயற்சியும் ஆதரவும்" கொண்ட ஆண்டவர் என்பதை இறைவார்த்தை தெளிவுப்படுத்துகிறது. அவர் எப்போதும் நம்மீது அன்பு கொண்டிருக்கிறார். நம் மீதான அவரது அன்பு என்றென்றும் மாறாது. நம்மை அன்பு செய்வதில் அவர் ஓய்ந்து போதில்லை. அவர் நம்மை பாதுகாத்து வருகிறார். தமது நன்மைத்தனத்தாலும் இரக்கத்தாலும் நமது காயங்களை தேற்றுகிறார். நமக்கு ஆறுதல் அளிப்பதை என்றென்றும் அவர் நிறுத்துவதில்லை.

அப்போஸ்தலர்களின் தொடக்க கால விசுவாச உறுதிப்பாட்டில் இதனைக் காணலாம். "பலவீனர்களின் தோல்வியைப் பொறுத்துக் கொள்ள வேண்டும், அதில் நாம் ஆனந்தம் கொள்ளக்கூடாது . இது, "நாம் வலிமையானவர்" என்ற தோன்றதை வழங்கும், ஆனால் நற்செய்தி கோணத்தில் பார்த்தால், நாம் வலிமையானவர் அல்ல, நமது வலிமையை நம்மிடமிருந்து வருவதில்லை, மாறாக கடவுளிடமிருந்து பெறுகிறோம். கடவுளின் அன்பு பிரமாணிக்கமாக தமது வாழ்வு அமைவதாக உணரும் ஒருவர், அவரது ஆறுதல் கிடைப்பதாக நம்பும் ஒருவர், வலிமையற்ற சகோதர–சகோதரிகளை அரவணைக்கும் கடமை உண்டு. ஆண்டவரோடு நாம் இணைந்திருந்தால், உதவித்தேவைப்படுவோரை அணுகும் வலிமையை நாம் பெறுவோம். நம்மை நாமே பெருமிதம் கொள்வதற்காக அல்லாமல், கடவுள் கொடையைப் பகிர்ந்து கொள்ளும் பாலமாக நாம் இருப்பதை உணர்வோம். இந்த வலிமையாலும் மற்றும் ஆறுதல் அளிக்கும் மனத்திறனாலும் இதனை செய்ய ஆண்டவர் நம்மை வினவுகிறார். இந்த நம்பிக்கை விதையை விதைப்பது அவ்வளவு எளிதல்ல...

ஆயினும் கிறிஸ்துவும் அவரது வார்த்தையும் நமது வாழ்வின் மையமாக இருந்தால் இது சாத்தியமே, ஏனெனில் அவரே வலிமை. அவரே நமக்கு வலிமையையும பொறுமையையும் நம்பிக்கையையும் ஆறுதலையும் கொடுப்பவர். அனைவரையும் அரவணைத்துச் செல்லும் "பெரிய அண்ணன்" அவரே. நல்லாயன் சுமந்து சென்று, அவரது அன்பிலும் பாதுகாப்பிலும் காத்துக் கொள்வார்.

விவிலியத்தின் வாயிலான கிடைக்கப் பெற்ற அவரது வார்த்தை கொடைக்கு நம்மால் நன்றி கூற இயலாது. அவ்வார்த்தையில்தான், கடவுள் அன்பையும் ஆறுதலையும் காண்கிறோம். நமது திறமையிலும் வலிமையிலும் நமது நம்பிக்கை அமையவில்லை மாறாக கடவுளின் ஆதரவாலும் மாசற்ற அன்பிலும் நமது நம்பிக்கை அமைகிறது. ✛

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWREC

31 டிசம்பர் 2017
திருக்குடும்பம்



# உலகில் விதைக்கப்பட்ட நம்பிக்கை

BUL 44/2017